ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2099/35 - 2018 නොවැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2018.11.30

*2099/35 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: என்சீபீ/ஈஎச்/எல்/1/விவி/42/55/காண்டம் 2.

காணி அமைச்சின் தொடர்பு இல.: 4-3/9/2014/IR/322.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வட மத்திய மாகாணத்தில், பொலநறுவை மாவட்டத்தில், எலஹர பிரதேச செயலாளர் பிரிவில், இல. 03, எலஹர கிராம அலுவலர் பிரிவின் சமகிபுர கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இல. 120251 (வலய இல. 07, தாள் இல. 03) மற்றும் 2018.09.27 ஆந் திகதிய கடத்திரல் வரைபடத்தின் துண்டு இல. 119 இலிருந்து 121 எனக் காட்டப்பட்டுள்ள முழு விஸ்தீரணத்தின் 0.3894 ஹெக்டயார் கொண்ட கீழ்வரும் காணித் துண்டுகளின் விபரங்கள் :

**1. துண்டு இல. 119 - காணியின் பெயர்: - ; விபரம்: தோட்டம், சுமார் 20 - 30 வயதுடைய கலப்புப் பயிர்ச்செய்கை உண்டு ; உரிமை கோருபவர்: அரசு ; அனுபவிப்பவர் : முருத்த வத்தே கெதர ஹெந்திரிக் என்பவரால் செய்கை பண்ணப் பட்டுள்ள மேலதிக பயிர்ச்செய்கை ; விஸ்தீரணம் : 0.0046 ஹெக்டயார்.**

வடக்கு : துண்டு இல. 117; கிழக்கு : துண்டு இலக்கங்கள் 120 மற்றும் 121 ; தெற்கு : துண்டு இல. 121 ; மேற்கு : துண்டு இல. 117.

**2. துண்டு இல. 120 - காணியின் பெயர்: - ; விபரம்: திறந்த தரிசு நிலம் ; உரிமை கோருபவர்: அரசு ; விஸ்தீரணம்: 0.797 ஹெக்டயார்.**

**3. துண்டு இல. 121 - காணியின் பெயர்: - ; விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டடம் ஒன்று மற்றும் சுமார் 20 - 30 வயதுடைய கலப்புப் பயிர்ச்செய்கையும் உண்டு ; உரிமை கோருபவர்: முருத்த வத்தே கெதர ஹெந்திரிக் ; விஸ்தீரணம் : 0.3051 ஹெக்டயார்.**

வடக்கு : துண்டு இலக்கங்கள் 118, 117, 119 மற்றும் 120; கிழக்கு : துண்டு இலக்கங்கள் 120, 123 மற்றும் 122 ; தெற்கு : துண்டு இலக்கங்கள் 122 மற்றும் 4 ; மேற்கு : துண்டு இலக்கங்கள் 4, 118, 117 மற்றும் 119.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட

*காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு எலஹர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்,*

*மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

*எஸ். எம். கே. குமாரிஹாமி,*
*பிரதேச செயலாளர்,*
*எலஹர.*

*பிரதேச செயலகம்,*
*எலஹர.*

*12 - 351*